ஓ.மு. எண். 996 / புவி / 2022

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
இயக்குநரகம், சென்னை – 600 106.

நாள். 30.05.2022.

## <u>சுற்றறிக்கை</u>

பொருள்: இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை – நவீன முறை மருத்துவக் கல்லூரிகளின் (Allopathy Side) வேலை நேரத்தைப் போல் இந்திய முறை மருத்துவப் பிரிவுகளும் பின்பற்றுவது – தொடர்பாக.

– – – – – – – – – –

இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் பல மாவட்டங்களில் நவீன முறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன. அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோயாளிகள் பார்வை நேரம் காலை 8.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை இயங்கி வருகிறது.

ஆனால், இந்திய முறை மருத்துவப் பிரிவுகளில் நோயாளிகள் பார்வை நேரம் காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் இயங்கிவருகிறது.

இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் நவீன முறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுடன் இணைந்த மருத்துவமனைகளாகும். இந்திய முறை மருத்துவப் பிரிவுகளில் மாறுபட்ட வெளி நோயாளர்களின் பார்வை நேரம் இயங்குவதால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் சில சமயங்களில் சிகிச்சை பெறுவதற்கு மாலை வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது.

**<u>எனவே, இந்திய முறை மருத்துவப் பிரிவுகளும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடைமுறையில் உள்ள நோயாளர்களின் பார்வை நேரம் காலை 8.00 முதல் மதியம் 2.00 மணி வரை என்பதை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்</u>.**

(த.பி.பா)

மேலும், எதிர் வரும் காலங்களில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோயாளர்கள் பார்வை நேரம் மாற்றம் செய்யப்பட்டால் அவர்கள் நடைமுறைபடுத்தப்படும் நேரத்தையே பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம்/– சு. கணேஷ்,
இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

பெறுநர்

| | |
|---|---|
| அனைத்து மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் | மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள் சம்பந்தப்பட்ட உதவி மருத்துவ அலுவலர்களுக்கு மேற்கண்ட நேரத்தை பின்பற்ற அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |

நகல் : அலோபதி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் – தகவலுக்காக அனுப்பப்படுகிறது

நகல் : தணிக்கை பிரிவு
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம்

நகல் : இயக்குநர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி – தகவலுக்காக

உண்மை நகல் / அனுப்பப்படுகிறது

31/5/22

உதவி இயக்குநர்.

31/05/2022 31/05/22